உ

# ஸ்ரீ முன்னேஸ்வர மான்மியம்

## (ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன்)



பிரம்மஸ்ரீ ச.பத்மநாப

ஸ்ரீ முன்னேஸ்வரம் தேவஸ்தானம்
சிலாபம், இலங்கை.

உ

சிவமயம்

# ஸ்ரீ முன்னேஸ்வர மான்மியம்

## (ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன்)

ஆசிரியர்:

**பிரம்மஸ்ரீ ச.பத்மநாபன்**

B.A.(Hons.) P.G.Dip.in.Edu., M.Phil.Sanskrit

விரிவுரையாளர், சம்ஸ்கிருதத்துறை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

வெளியீடு:

ஸ்ரீ முன்னேஸ்வரம் தேவஸ்தானம்

முன்னேஸ்வரம்

சிலாபம்

24.07.2015

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | ஸ்ரீ முன்னேஸ்வர மான்மியம் (ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன்) |
| முதற் பதிப்பு | : | 2015.07.25 |
| பதிப்பாசிரியர் | : | பிரம்மஸ்ரீ ச.பத்மநாபன் |
| வெளியீடு | : | ஸ்ரீ முன்னேஸ்வரம் தேவஸ்தானம், முன்னேஸ்வரம், சிலாபம். |
| அச்சுப்பதிப்பு | : | மதி கலர்ஸ் பிறிண்டர்ஸ், நல்லூர். |
| பிரதிகள் | : | 1000 |
| பக்கம் | : | iv, 1-102 |
| ISBN | : | 978-953-0-877-43-0 |

# முகவுரை

இலங்கை சிவபூமி என அழைக்கப்படும் சிறப்புடையது. இவ்விலங் கையில் சிவவழிபாடு மேன்மை பெற்று விலங்கியது. அவ்வகையில் ஸ்ரீராம பிரான் வழிபட்டதும், வியாச மகா முனிவர் பூஜித்ததுமான சிறப்புடையது முன் னேஸ்வரம் ஆகும். முன்னேஸ்வர தலமகிமையைக் கூறும் நூலாக 'முன் னேஸ்வர மான்மியம்' விளங்குகின்றது. அம்முன்னேஸ்வர மான்மியம் எனும் நூலை பண்டைய மரபுகளையும் ஐதிகங்களையும் மட்டுமே கூறி நிற்கின்றன. அந்நிலையில் அந்நூல் கூறும் விடயங்களை ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன் வெளியிடப்படும் நூலாகவே இந்நூல் அமைகின்றது.

'ஸ்ரீ முன்னேஸ்வர மான்மியம்' எனும் பழைய நூல் ஐதிகம் சார்ந்த தாகவே கொள்ளப்படும் அதேவேளை வரலாற்று நோக்கில் நோக்குகின்ற போது தொடர்ச்சியாக வரலாற்றுத் தொடர்புகளையும் பண்பாட்டு அம்சங்களை யும் மிக விரிவாக ஆராயவேண்டிய தேவையையும் அவசியத்தையும் உணர முடிகின்றது. அவ்வகையில் முதற்கட்டமாக 'ஸ்ரீ முன்னேஸ்வர மான்மியம்' எனும் பழைய மரபுடைய நூலில் காணப்படும் காலம்பற்றியது தவறான செய்தி களைத் திருத்தியும், அதேவேளை கூறப்பட்ட விடயங்களுக்கு அடிக்குறிப்புக் களையும் இட்டு ஓர் ஆராய்ச்சி நோக்குடையதாக பதிப்பித்து வெளியிடப்படு கின்றது. இவ்வகையில் இந்நூல் முக்கியத்துவ முடையதாககின்றது.

முன்னேஸ்வர ஆலயம் தொடர்பாக பல்வேறு பண்பாடுசார் அம்சங்களும் தொடர்ச்சியான வரலாற்றுப் பதிவுகளும், ஆவணங்களின் பதிவுகளும் பாதுகாக்கப்படவேண்டிய தேவை காலத்தின் தேவையாக அமைகின்றது. இவ்வகையில் ஓர் விழிப்பூட்டும் முதன் முயற்சியாக இந்நூல் ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன் வெளியிட்டு வைக்கப்படுகின்றது.

முன்னேஸ் வரம் ஆலயம் சார்ந்த பண்பாட்டின் அனைத்து கூறுகளும் ஆராய்ச்சி பூர்வமான ஆவணமாக பாதுகாக்கப்படவேண்டியது இவ்விரு இங்கு நன்கு உணரற்கூடிய தாக உள்ளது. அவ்வகையில் பிரபந்தங்கள், வரலாற்று நூல், பழைய நிகழ்வு கள் போன்றன பதிப்பிக்கப்பட்டுள்ளமை இதனது ஓர் படியாகவே அமைகின்றது.

ஸ்ரீ வடிவாம்பிகை சமேத ஸ்ரீ முன்னநாதப் பெருமானின் திருவடி களில் இந்நூலை சமர்ப்பிக்கின்றேன். இந் நூலின் பயனை அனைவரும் பெறவேண்டும் என கேட்டுக்கொள்கின்றேன்.

இங்ஙனம்
இறைபணியில்
பிரம்மஸ்ரீ ச.பத்மநாபன்
விரிவுரையாளர்
சம்ஸ்கிருதத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்.

பிரதான குருவும் தர்மகர்த்தாவும்,
ஸ்ரீ முன்னேஸ்வரம் தேவஸ்தானம்,
முன்னேஸ்வரம்,
சிலாபம்.